உ
சிவமயம்



இலங்கைப் பாராளுமன்றத்துக்
கோப்பாய்த் தொகுதி முன்னாள் பிரதிநிதி

நியாயதுரந்தரர்

## உயர்திரு. மு. பாலசுந்தரம் அவர்கள் B. A., B. Sc.

# நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



இலங்கைப் பாராளுமன்றத்துக்

கோப்பாய்த் தொகுதி முன்னாள் பிரதிநிதி

நியாயதுரந்தரர்

## உயர்திரு. மு. பாலசுந்தரம் அவர்கள் B. A., B. Sc.

# நினைவு வெளியீடு

| தோற்றம் : | மறைவு : |
| --- | --- |
| 7-4-1904 | 15-12-1965 |
| திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்: பண்டிதர் சு. இராசையா, நல்லூர்.

அச்சுப்பதிவு

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியாயதுரந்தரர்

## திரு. மு. பாலசுந்தரம் அவர்கள்

தோற்றம்: 7-4-1904. மறைவு: 15-12-65.

### நினைவு நாள்

ஈழத் தவப்புதல்வன் எம்பால சுந்தரனார்
வாழச் சிவலோகம் வாய்ந்தநாள் — கேளுங்கள்
ஆண்டுவிசு வாவசியில் ஆனமதி கார்த்திகைசேர்
மாண்டபக்க சப்தமியே மன்னு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அறிமுகம்

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்"

இது திருவள்ளுவர் திருவாக்கு. வையகத்தின்கண் வாழு மியல்போடு வாழ்பவன் வையகத்தானேயாயினும், வானின்கண் உறையுந் தேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவானென்பது இதன் கருத்து.

வாழ்வின் முதற்படி பிறப்பு; இறுதிப்படி மரணம். இந்த இரண்டுக்கும் இடையில் எத்தனையோ சுக துக்கங்கள்—மேடு பள்ளங்கள் தாண்டவேண்டியது மனிதனது கடமை. இக்கடமைகளுக்கு நியதி என்றுங் கூறலாம். இந்நியதியைத் தெய்வநியதி என்றெழுகுவது ஒரு சுகமான வழி. இதனால் என்றும் இன்பமேயன்றித் துன்பத்துக்கு இடமில்லை.

மரணம் நிழல் போன்றது; நிச்சயமாக நம்மை வந்தடைவது. அதற்கிடையில் யாக்கை செல்வம் உத்தியோகம் முதலிய நிலையில்லாதனவற்றை நிலையுள்ளன என்றுணருவது புல்லறிவாண்மை. இதுவும் நம்மை விட்டகலாமல் இருக்கின்றது. அன்றியும் வாழ்க்கை நடாத்த எத்தனையோ வேடங்களைத் தரிக்க வேண்டியிருக்கின்றது. இவ் வேடங்களைக் கண்டு இகழவோ புகழவோ கூடாது.

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் **நியாயதுரந்தரர் திரு. மு. பாலசுந்தரம்** அவர்கள். சைவ சித்தாந்த சாத்திரங்களுள் தலைசிறந்தது சிவஞானசித்தியார் ஆகும். இந்நூலின் சுபக்கத்தை யாவரும் உணர இனிய உரைநடையில் எழுதியவர் **திரு. க. முருகேசுப் போதகர்** ஆவர். பகவத்கீதை இவருடைய உயிர் எனலாம். இவ்வுத்தமன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் B. Litt. பரீட்சையிற் சித்தியடைந்தவர். இவருடைய மூத்த புதல்வரே திரு. பாலசுந்தரம் அவர்கள்.

திரு. மு. பாலசுந்தரம் அவர்கள் இலங்கைச் சர்வ கலாசாலையில் B. Sc. பரீட்சையில் முதலாம் பிரிவில் முதலாவதாகச் சித்தியடைந்தமையால் இங்கிலாந்திலே கேம்பிரிச் சர்வகலாசாலையிலே அரசாங்க வெகுமதிப் பணத்திற் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B. A. பரீட்சையில் ஒரு பகுதியான கணிதப் பிரிவில் Tripos விசேட சித்தி பெற்ருர். ஆங்கு நின்றும் இலங்கைக்கு வந்து சட்டக் கல்லூரி யிற் கற்று நியாயதுரந்தரர் ஆயினர். பல நீதியரசர்களாற் புகழப் பட்டவர் இவர்.

இவர் நாவன்மையால் நாவலனுகவும், சேவையினுற் காவலனு கவும், பாக்கள் இயற்றுவதனுற் பாவலனுகவும் சிறந்து விளங்கினுர். தேசாபிமானம் பாஷாபிமானம் சமயாபிமானம் பெரிதும் உடைய வர். இலங்கைப் பாராளுமன்றத்திற் கோப்பாய்த் தொகுதிப் பிரதி நிதியாய் அண்மையில் ஐந்தாண்டுகளாகக் கடமையாற்றியவர். பாராளுமன்றத்திற் புகழ் படைத்த பெருமக்களில் இவரும் ஒருவ ராவர். தெய்வ பக்தியில் உறுதியான நம்பிக்கை உடையவர்; **அருட்டிரு யோகசுவாமி**களைக் குருவாகக் கொண்டவர்.

திரு. மு. பாலசுந்தரம் அவர்களோடு உடன்பிறந்தவர்களும் புகழ்படைத்தவர்களே. அவர்களில் ஆண்பாலார் இருவர். ஒருவர் மட்டக்களப்பில் வழக்கறிஞராகப் புகழ் பெற்றிருந்த **திரு மு. கனக சுந்தரம்** அவர்கள். மற்றவர் வித்தியாதரிசியாக இருந்த **திரு. மு. இராசசுந்தரம்** B. Sc., அவர்கள். இவர்கள் இருவரும் காலஞ் சென்று விட்டார்கள். இவருடைய சகோதரிகள் மூவர். ஒருவர் வட்டுக்கோட்டைக் கல்லூரியிற் கற்பித்த திரு. விசுவலிங்கம் அவர் களின் மனைவி **அன்னபூரணம்** அவர்கள். இவர்களும் இயற்கை யெய்திவிட்டார். மற்றவர் கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அதிபராக இருந்த **செல்வி மு. ஞானம்** B. Sc., அவர் கள். ஏனையவவர் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் ஆசி ரியையாகக் கடமையாற்றிய **செல்வி மு. பொன்னம்மா** B. A., அவர் கள். சகோதரிகளிருவரும் தங்கள் உத்தியோகத்தினின்றும் இளைப் பாறியிருக்கின்ருர்கள்.

திரு. மு. பாலசுந்தரம் அவர்கள் தமது வாழ்க்கைத் துணையாகத் திருநெல்வேலி திரு. வே. சின்னத்தம்பி அவர்களின் கனிஷ்ட புத்திரி **சின்னம்மாவை** மணஞ் செய்து கொண்டார். அன்பும் அறனும் உடைத்தாய இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாகக் கொண்டமை யால், பொறியியற்கலை வல்லுனரான **திரு. ஞானசண்முகமும்,** நியாய துரந்தரரான **திரு. யோகசுந்தரமும்,** டாக்டரான **திரு. பாலகிருஷ் ணனும், செல்வன் சிவானந்தசுந்தரமும், செல்வி சுந்தரி** B. Sc., **யும், செல்வி யோகேஸ்வரியும்** மக்களாக உள்ளனர். திரு. ஞானசண் முகம் அவர்கள் **விமலாதேவியை** மணந்து **நரேஸ்** என்னும் மகனைப் பெற்றுள்ளார். தம் வாழ்க்கையிற் பேரனைக் கண்ட பேற்றையும் உடையவர் திரு. மு. பாலசுந்தரம் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியதி தத்துவத்தின்படி திரு. மு. பாலசுந்தரம் அவர்கள் விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் அபரபக்க சப்தமித் திதியில் (15-12-65) புதன்கிழமை காலை, உற்றார் உறவினர் ஊரார் மனைவி மக்கள் அனைவரும் கதறியழ இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்பது திருவள்ளுவர் திருவாக்கு.

இப்புண்ணியவாளனை நினைவு கூருமுகமாக இவ்வெளியீடு உதயமாகின்றது. இதிலே திரு. மு. பாலசுந்தரம் அவர்களின் குண விசேடங்களும் வாழ்க்கைச் சுருக்கமும் கவிகளால் யாக்கப்பட்டுள்ளன.

இவருடைய ஆத்ம சாந்திக்காகச் சிவபுராணமும், திருமுறை மஞ்சரியும், இவர்குரு அருட்டிரு யோகசுவாமிகள் அஞ்சலியும் இணைக்கப்பட்டுள்ளன.

---

எல்லாச் சிந்தனைகளையும் எல்லாச் செயல்களையும் எல்லா வார்த்தைகளையும் ஈசுவரனிடத்தில் அர்ப்பித்தும் நாம் ஈசுவரனை அணுவளவேனும் மறந்திருப்போமாயின், அது நம்மைப் பெரிய துக்கத்திலாழ்த்திவிடும். ஏனெனில் இவற்றை அர்ப்பிப்பதும் நாம் அவரை மறவாதிருத்தற்கே ஆதலால்.

— ஆன்மவிசாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இரங்கற் பாக்கள்

—:O:—

## நியாயதுரந்தரர் திரு. மு. பாலசுந்தரம் அவர்களின் குண விசேடங்கள்

### வெண்பா

1. நெஞ்சிற் களங்கமிலான் நீதித் தலங்களிலே
அஞ்சா துரைக்கும் அரிபோறு — விஞ்சுபுகழ்
பாராளு மன்றத்துப் பாலாநின் சேவையெலாம்
யாரால் முடியும் இசை.

2. சைவம் புரப்போய் தமிழ்புரப்போய் தங்கடமை
செய்கரும வீரநிறை சிந்தையுளோய் — வையம்
புகழ்கணித வித்பன்ன! போயினையே எங்குந்
திகழ்தரவே வாழ்ந்தீர் சிறந்து.

3. வாக்கெங்கே வீர வனப்பெங்கே வாதஞ்செய்
போக்கெங்கே சற்றே புகலாயோ — சாக்கொல்லும்
கூற்றங் குதித்தெதிர்கொல் கூற்றால் மடக்கிலை ஏ
மாற்றஞ்செய் யாதிருந்த வாறு.

4. கல்வி யழகுங் கதித்தெழுந்த பேச்சழகும்
நல்ல குணமும் நகைச்சுவையும் — தொல்புவியில்
இல்லை உனைப்போல என்றிருந்தோம் என்செய்வோம்
நில்லாது வானடைந்தாய் நீ.

5. சொல்லுறுதி எங்கே! சுகுமாரத் தோற்றமெங்கே!!
பல்விழுந்து மூத்துப் பழுத்தனையே! — எல்லவரும்
கூடியழு கின்றூர்கள் கூற்றன்கை யாயினையே
நாடி வருந்துகின்றோம் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைச் சுருக்கம்

### ஆசிரிய விருத்தம்

6. வான்றொடு வரைக ணின்று வனப்பொடு பெருகும் யாறு
தான்றரு மணிக்குத் தக்க தரளமே உதவும் வேலை
ஈன்றவள் தழுவல் போல எங்கணும் தழுவல் கொண்ட
வான்புகழ் ஈழத்தோங்கி மருவுயாழ் நகரே யாங்கு.

7. கல்விசேர் மாந்தர் தம்மாற் கவின்செறி **உடுவில்** தன்னில்
எல்லவர் தமக்கும் நல்லான் எழில்முரு கேசன் என்னும்
நல்லியற் போதகர்க்கு நானிலத் தவமே யென்னப்
பல்விதத் தோங்கி நிற்கும் பாலசுந் தரமு தித்தார்.

8. வித்தியா பீட மாக விளங்குபல் கலைக்கூ டத்துச்
சித்தியால் அரசாங் கத்துச் சிறந்திடும் உதவி பெற்று
எத்திசை தானும் போற்ற இங்கிலாந் தேகிக் கல்வி
வித்தக ஞகிப் பட்டம் மேவினன் **பாலா** நானே.

9. சூரிய மதியும் நேர்மை கொள்கையில் திறம்பா உள்ளம்
சீரிய ஒழுக்க லாறு சிறந்துள பேச்சு வன்மை
ஏரியல் தோற்ற மெல்லாம் இணைந்தொரு வடிவே யாகிப்
பாரிய அப்புக் காத்தாய் பண்பொடு வாழும் நாளில்.

10. திருவொடு கலையுஞ் சேர்ந்து சிறப்புறு திருநெல் **வேலி**
மருவிய **சின்னத் தம்பி** மகளிருள் இளைய நங்கை
திருவெனும் அன்புத் தெய்வச் **சின்னம்மா** நாமத் தாளைப்
பெருமையாய் மணந்து வாழ்நாள் பெறலரும் புதல்வர் வந்தார்.

11. **ஞானசண்** முகமாம் நல்லோன் நலந்திகழ் இன்சி னீயர்
ஆனவன் முதலாய் **யோக** சுந்தர நியாய வாதி
ஞானமே நிறைந்த டக்ரர் நற்குண **பால** கிருஷ்ணன்
மானமே நிறைசி **வானந்த** சுந்தர மான மைந்தர்.

12. பல்கலைக் கழகந் தன்னிற் பட்டந்தான் பெற்ற பாவை
சொல்லருங் குணக்குன் றுன சுந்தரி நங்கை யோடு
நல்லியல் புடைய யோகேஸ் வரியெனும் இருபெண் மக்கள்
கல்விசேர் பண்பா டோங்கிக் கவினிடுங் காலந் தன்னில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தோன்றிடிற் புகழோ டென்றும் தோன்றுக என்னும் வாக்கு
தோன்றிட எங்கள் கோவைத் தொகுதிப்பா ராளு மன்ற
வான்புகழ் நிறுத்தும் அங்கம் வகித்தைந்தாண் டாகச் சேவை
சான்றவர் மதிக்க ஆற்றித் தக்கவூ ருணிபோ லாகி.

14. அருட்டிரு யோக சுவாமி ஆப்தநல் உபதே சத்தைப்
பொருளெனப் போற்றி வாழ்ந்து புவிபுகழ் சோத ரங்கள்
மருமகள் விமலா பேரன் நரேசுடன் மனையாள் மக்கள்
வருந்திட அறுபத் தைந்தில் வானவர் பதியிற் புக்கார்.

15. மறந்திடப் போமோ வையம் மற்றுநின் சேவை யெல்லாம்
அறந்திகழ் உபதே சங்கள் அரசியல் அகன்ற ஞானம்
சிறந்திடு தேச பக்தி செந்தமிழ் உணர்ச்சி யாவும்
பெறலரும் பேறே! எந்தப் பிறவியிற் காண்போம் ஐயா!

## தேற்றம்

### கட்டளைக் கலித்துறை

16. மன்னுதி மன்னரும் மாண்டே யொழிந்தார் மகிதலத்தே
என்னே கதறி அழுதாற் பயனில்லை என்றறிவீர்
மின்னே ரிடையுமை மேவும் பிரானடி மேவியவன்
தன்னே ரிலாவருள் சார்மின் கவலை தனைவிடற்கே.

ஓம் சாந்தி சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறைகள்

## தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

— சுந்தரமூர்த்தி சுவாமி.

## திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பிவெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசயபோற்றி யென்னுங்
கைதா னெகிழவிடே னுடையா யென்னைக் கண்டுகொள்ளே.

— மாணிக்கவாசக சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவாசகம்

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
யல்ல லறுத்தானந்த மாக்கியதே — யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
யாராத வின்ப மருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யளிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்களிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடை யாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேசவருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓரா தாருள்ளத் தொழிக்கு மொழியானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
　　யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
　　சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவளருள்ளத் தானந்தக் கனியே
　　யம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
　　தொண்டனேன் விளம்புமா விளம்பே.

— திருமாளிகைத்தேவர்.

## திருப்பல்லாண்டு

பானுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
　　பாற்கட லீந்தபிரான்
மானுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
　　மன்னிய தில்லை தன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
　　பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
　　பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்.

## திருப்புராணம்

அருவமு முருவு மாகி
　　யனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
　　பிழம் பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
　　கரங்கள் பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன
　　னுலக முய்ய.

— கச்சியப்பசுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனு மணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர் வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

— அருணகிரிநாதர்.

---

உ

சிவமயம்

## அருட்டிரு யோகசுவாமிகள் போற்றி

அருள் ஞானம் பழுத்தசிவ வடிவே போற்றி
அகிலமெலாந் தொழுமடியார்க் கருள்வாய் போற்றி
இருள் நிறைந்த அகமதனுக் கிரவீ போற்றி
என்றென்றும் ஆத்மபசிக் கமுதே போற்றி
தெருளாதார்த் தெளிவிக்குஞ் சிவமே போற்றி
திசையனைத்தும் நிறைந்திலங்குந் திருவே போற்றி
அருளுருவே குருவடிவாய் ஆனாய் போற்றி
அருட்சோதி யோகமுனி அடிகள் போற்றி!

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.—494-65.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org